ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2312/72 - 2022 දෙසැම්බර් මස 31 වැනි සෙනසුරාදා - 2022.12.31

*2312/72 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV(ஆ) - உள்ளூராட்சி

### உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**கொழும்பு மாநகர சபை**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின், 2017.07.26 ஆம் திகதிய 2029/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்ட வாகனங்களை நிறுத்துவது தொடர்பான துணை விதியின் 11(1) மற்றும் 21 ஆவது பிரிவுகளின் கீழ் கொழும்பு நகரில் நிறுத்தப்படும் வாகனங்களில் இருந்து கொழும்பு மாநகர சபையால் அறவிடப்பட வேண்டிய தரிப்பிடக் கட்டணங்களை திருத்தம் செய்தல்.

2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் 29 ஆந் திகதிய கொழும்பு மாநகர சபையின் சபைத்தீர்மானத்திற்கமைய, கொழும்பு நகரின் வீதிகளில் அல்லது வீதியின் ஒரு பகுதியில் நிறுத்தப்படும் வாகனங்களுக்காக தரிப்பிடக் கட்டணம் அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறும், வாகனத் தரிப்பிடக் கட்டணத்தைச் செலுத்தத் தவறியவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தாமதக் கட்டணங்கள் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறும் திருத்தப்பட்டுள்ளதாக அனைவரினதும் தகவலுக்காக இத்தால் அறிவிக்கப்படுகிறது.

இந்த திருத்தப்பட்ட புதிய கட்டணங்கள் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட நாளிலருந்து நடைமுறைப்படுத்தப்படும்.

**ஜே. எம். பி. ஜயவர்தன,**
மாநகர ஆணையாளர்,
கொழும்பு மாநகர சபை.


1A - PG 6139 — 106 (2022/12)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## அட்டவணை I

| | | ஒரு மணிநேரம் அல்லது அதன் பகுதிக்கான தரிப்பிடக் கட்டணம் (ரூபாய்) | ஒரு மாதம் அல்லது அதன் ஒரு பகுதிக்கான தரிப்பிடக் கட்டணம் (ரூபாய்) |
|---|---|---|---|
| i. | ஒரு மோட்டார் சைக்கிளுக்கு | 20.00 | |
| ii. | ஒரு மோட்டார் ட்ரைசிக்கலுக்கு | 40.00 | |
| iii. | ஒரு மோட்டார் கார் அல்லது இரட்டை நோக்கம் கொண்ட வாகனம் | 70.00 | |
| iv. | ஒரு பஸ், மோட்டார் கோச், மோட்டார் லொரி, லைட் மோட்டார் லொரி, கனரக மோட்டார் லொரி | 100.00 | |
| v. | ஒரு பாடசாலை வேனுக்காக | | 600.00 |
| vi. | ஒரு பாடசாலை பேருந்துக்காக | | 1000.00 |
| vii. | ஒரு பணியாளர் சேவை வேனுக்கு | | 1200.00 |
| viii. | ஒரு பணியாளர் சேவை பஸ்ஸுக்கு | | 2000.00 |

*குறிப்பு :*

1. தரிப்பிடக் கட்டணம் அரச விடுமுறை நாட்கள் தவிர ஒரு மாதத்தில் ஒவ்வொரு நாளுக்கும் பொருந்தும்.

2. மேற்கண்ட தரிப்பிடக் கட்டணம் முற்பகல் 6.00 மணி முதல் நள்ளிரவு 12.00 மணி வரை பொருந்தும். இருப்பினும், மருத்துவமனைகளுக்கு அருகில் தரிப்பிடக் கட்டணம் முற்பகல் 6.00 மணி முதல் பிற்பகல் 6.00 மணி வரை விதிக்கப்படும். மேலும் பாடசாலைகளுக்கு அருகில் முற்பகல் 6.45 முதல் முற்பகல் 7.45 வரையும், மதியம் 12 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரையும் தரிப்பிடக் கட்டணம் விதிக்கப்படாது.

## அட்டவணை II

மேற்படி ஏற்பாடுளுக்கு முரணான வகையில் நிறுத்தப்பட்ட வாகனங்களுக்கான தாமதக் கட்டணம் (ரூபாய்).

| | | தாமதக் கட்டண அறிவிப்பொன்று வெளியிடப்பட்ட தருணத்திலிருந்து 24 மணி நேரத்திற்குள் தாமதக் கட்டணம் செலுத்தப்பட்டால், ஒரு மணி நேரத்திற்கு தாமதக் கட்டணம். | தாமதக் கட்டண அறிவிப்பொன்று வெளியிடப்பட்ட, தருணத்திலிருந்து 24 மணி நேரத்திற்குள் தாமதக் கட்டணம் செலுத்தப்படாவிட்டால், ஒரு மணி நேரத்திற்கு தாமதக் கட்டணம் |
|---|---|---|---|
| i. | ஒரு மோட்டார் சைக்கிளுக்கு | 40.00 | 1000.00 |
| ii. | ஒரு மோட்டார் ட்ரைசிக்கலுக்கு | 60.00 | 1500.00 |
| iii. | ஒரு மோட்டார் கார் அல்லது இரட்டை நோக்கம் கொண்ட வாகனம் | 100.00 | 2500.00 |
| iv. | ஒரு பஸ், மோட்டார் கோச், மோட்டார் லொரி, லைட் மோட்டார் லொரி, கனரக மோட்டார் லொரி | 150.00 | 3600.00 |
| v. | ஒரு பாடசாலை அல்லது பணியாளர் சேவை வேனுக்கு | 100.00 | 2500.00 |
| vi. | பாடசாலை மற்றும் பணியாளர்கள் சேவை பேருந்து | 150.00 | 3600.00 |

EOG 12 -0409

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.